1970 மார்ச் 21]

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, திருத்தணியிலே பெண்கள் உயர்தரக் கல்விக்காக அங்குள்ள பொதுமக்கள் பணத்தைக் கொடுத்து, நிலத்தை வாங்கி எஜுகேஷன் டிபார்ட் மெண்டிடம் ஒப்படைத்திருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? எஜுகேஷன் டிபார்ட்மென்ட் அதற்கு கட்டிடம் கட்டுவதற்காக ஒரு எஸ்டிமேட் தயாரித்திருந்துங்கூட, பணத்தைச் செலவு செய்து கட்டிடம் கட்டவில்லையென்பது தெரியுமா? என்ன காரணம்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, திருத்தணியில் 2.68 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் ஊராட்சி ஒன்றியத்தால் வாங்கப்பட்டு, அரசுக்கு அளிக்க முன்வந்திருக்கிறது. அந்த நிலம் வாங்கப்பட்ட விவரங்களைக் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரை ஓர் அறிக்கை சமர்ப்பிக்கும்படி அரசு கேட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, கல்வி இயக்குநர் கட்டிடம் கட்டுவதற்கான திட்டத்தை அனுப்பி வைப்பார்கள். அப்படி அனுப்பி வைக்கப்பட்ட பிறகு கட்டிடம் கட்டுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

Sri Ramakrishna Mission schools in City.

* 475.*Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether a number of schools of the Sri Ramakrishna Mission have been upgraded from this year in Madras City; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) : சென்னை நகரத்தில் ராமகிருஷ்ண மிஷன் நிர்வாகத்திலுள்ள ஒரு நடுத்தரப் பள்ளி மட்டும் இவ்வருடம் உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டது.

மதுரை மாவட்டத்தில் அரிசனங்களுக்காக பஸ் கம்பெனி

* 476 வினு—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா —

மதுரை மாவட்டத்தில் அரிசன மக்கள், பின்தங்கிய வகுப்பினரின் பங்குத் தொகையுடன் புதிய பஸ் கம்பெனி துவக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை, மதுரை மாவட்டத்தில் இதற்கு முன்பே அரிசனங்களுக்காக அவர்களாலேயே அவர்களுடைய பங்குத் தொகையைக் கொண்டு பஸ் கம்பெனி ஒன்று துவக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, இந்த பஸ் கம்பெனி லாபத்தில் ஓடுகிறதா? லாபத்தில் ஓடினால் இதுபோல மற்ற மாவட்டங்களிலும் அரிசனமக்கள் பின்தங்கிய வகுப்பினரின் பங்குத் தொகையிலே கூட்டுறவு முறையிலே பஸ் கம்பெனி துவங்க அரசு உதவி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின்மூலம் அரிசனங்களுக்கு மட்டும் தான் இப்படி உதவ கூட்டுறவுச் சங்கம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. தற்போது மதுரையில் ஓடுகின்ற பஸ் மூலம் இலாபம் இருப்பதாகக் கூறப்படுகிறது. வேறு ஒரு பஸ்ஸுக்கும் அரசாங்கம் உதவ வேண்டுமென்று அரசாங்கத்தை 1,50,000 ரூபாய் கேட்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. மற்றும் கோவை மாவட்டத்தில் இப்படி பஸ் விட ஆரம்பித்திருக்கிறார்கள். சில மாவட்டங்களில் பங்குத்தொகையை சேர்த்து வருகிறார்கள்.

திரு. கரு. சீமைச்சாமி: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையிலே அரிசனங்கள்-பின்தங்கிய மக்கள் பஸ் தொழிலை ஆரம்பித்தால் அரசாங்கம் என்னென்ன உதவிகள் செய்கிறது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, இப்போது அரிசனங்களுக்கு மட்டும்தான் இந்த உதவி செய்யப்பட்டு வருகிறது. பத்தாயிரம் ரூபாய் வரையிலும் அரசாங்கத்தின் பங்குத் தொகையாகக் கொடுத்து வருகிறது.

திரு. மா. பா. சாரதி: தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபிசர் மூலம் அரிசனங்கள் பஸ் தொழிலை நடத்த கூட்டுறவு முறையில் பங்குத் தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறதே, அது எந்த நிலைமையில் இருக்கிறது? எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, இன்னமும் அந்தப் பங்குத் தொகை பூர்த்தியாக்கப்படவில்லை யென்று தகவல் வந்திருக்கிறது. பங்குத் தொகை பூர்த்தியாக்கப்பட்ட பிறகு அதற்கான வேலைகள் தொடங்கப்படும்.

சலவைத் தொழிலாளர்களுக்கும், முடி திருத்தும் தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்பட்ட கடன்கள்

*477 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்தும் தொழிலாளர்கள் செலுத்த வேண்டிய கடனை இந்த அரசு தள்ளுபடி செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(ஆ) ரூ. 2,26,471-95 பை.